# திருவருகைக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

பாவ உடையைக் களைந்து மனமாற்றம் எனும் புத்தாடையை அணிந்து இறைவனுக்கான பாதையை ஆயத்தமாக்க இன்றைய திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறு அழைப்பு விடுக்கிறது.

இங்கு ஏற்றப்பட்டிருக்கும் மெழுகுதிரி எவ்வாறு இருளை நீக்கி ஒளியைத் தருகிறதோ அது போல இருள் என்னும் பாவம் நீக்க மனமாற்றம், மன்னிப்பு என்னும் ஒளியை நம்முள் ஏற்றுவோம். இறைவன் பாவியை ஒருபோதும் வெறுத்ததில்லை. பாவத்தைத் தான் வெறுத்தார். பாவ வாழ்க்கையில் இன்பம் கிட்டலாம். ஆனால் அது இறைவன் வெறுப்பது அல்லவா? எனவே பாதையை செம்மையாக்கி இறைவனை அகம் பிரவேசிக்க அழைப்போம்.

இன்றைய முதல் வாசகத்தில், கடவுளின் மாட்சியால் இஸ்ரயேல் மக்கள் மகிழ்ச்சியால் அக்களிப்பதையும் இயற்கை இன்பமான வாழ்வை அளித்ததையும் பாரூ ஆகமத்தில் காண்கின்றோம். துன்ப, துயரத்தை களைந்து விட்டு, கடவுளின் மாட்சியின் பேரழகை அணிந்து கொள் என்று உச்சக்கட்ட ஆசியை அளிக்கிறது. பாவத்தை நம்மிலிருந்து களையும் போது, மனமாற்றம் ஏற்றம் பெறும் போது இஸ்ரயேல் மக்கள் பெற்ற அதே ஆசி, இறைவனின் ஆசி, இயற்கையில் ஆசி அனைத்தும் நம்மேல் தங்கும்.

“ஆண்டவருக்கான வழியை ஆயத்தமாக்குங்கள்; அவரின் பாதையை செம்மையாக்குங்கள்” என்று நம்மை உரக்கக் கூவி அழைக்கிறது இன்றைய நற்செய்தி வாசக வார்த்தைகள். “கோணலானவை நேராக்கப்படும்” என்ற வார்த்தைகள் இறைவனின் வருகையின் போது நிகழ்த்தப்படும். இங்கு மனிதர்களால் கோணலாக்கப்பட்ட அனைத்து காரியங்களும், இந்நாட்டிலும், மக்கள் இதயங்களிலும், இறைவன் வருகையால் நேராக்கப்படும். அந்நாட்களைக் காண எதிர்நோக்கியிருக்கும் நாம், நம்மில் உள்ள “இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து, இறைவனை இதயத்துக்குள் பிரவேசிக்கச் செய்யும் போதுதான், ஒளியின் மேன்மையை அனுபவிக்க முடியும்” என்ற சிந்தனைகளோடு இப்பலியில் இணைவோம்.

### இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. மனம் மாறி திருமுழுக்கு பெறுங்கள் என் அழைத்தவரே எம் இறைவா!

உமது வழியை ஆயத்தப்படுத்த, செம்மைப்படுத்த நீர் அழைத்த திரு அவைத் தலைவர்கள், பணியாளர்கள், துறவறத்தார் மக்களை மனமாற்றத்திற்கு இட்டுச் செல்லும் பணியினை உம் வழியில் செய்யும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கோணலானவை நேராக்கப்படும் என்று வாக்குறுதி தந்தவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், அதிகாரிகள் தங்கள் வழிகளை சரியாக்கி, மக்களை மகிழ்விக்கும் நல்திட்டங்களால் கோணலானவைகளை நேராக்கும் ஞானம் தந்து வழிநடத்தும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மனம் மாறுங்கள் என்று அழைத்தவரே எம் இறைவா!

உமது வருகையை எதிர்நோக்கி இருக்கும் நாங்கள், உமது வழிகளில் பயணிக்க தடையாக இருக்கும் இவ்வுலக நாட்டங்களில் மிதமிஞ்சித் திளைத்திருக்காமல், ஆடம்பரங்களில் அக்கறை காட்டாமல், இரக்கம் நிறைந்த மனதில் உம்மை வரவேற்க வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உமது அருளால் எம்மை நிரப்புபவரே எம் இறைவா!

எம் பகுதி வாழ் மக்களை ஆசிர்வதியும். உம் வருகை குடும்பங்களில் உள்ள துன்பங்களைக் களைந்து, மகிழ்ச்சியைக் கொண்டு வரவும், நோயாளிகள் குணம் பெறவும், உள்ளத்து தேவைகளை இறைவன் நிறைவேற்றவும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com